# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8073100

C

1. District : மாவட்டம் விருதுநகர்    PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு, விருதுநகர்    Year: ஆண்டு 2019    FIR No.: மு.த.அ. எண் 04/2019    Date: நாள் 23-02-19

2. (i) Act சட்டம்:    Sections பிரிவுகள்: U/S 102 Crpc and
(ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்: 7 of Prevention of
(iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்: Corruption Amendment Act, 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 22-02-2019    Date from : நாள் முதல் 1700 மணி    Date to : நாள் வரை 2030 மணி
Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்    Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 63 kms தென் மேற்கு
Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம், முடங்கியார் ரோடு, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.எஸ்.ஷாஜஹான்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. சையது அமானுல்லா.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1970    (d) Nationality : நாட்டினம்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்    (g) Address : முகவரி திணை ஆய்வுக் குழு அலுவலர், அருப்புக்கோட்டை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. மாரிமுத்து, தொழிலாளர் உதவி ஆய்வாளர், தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம், இராஜபாளையம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுவது,

இன்று 23-02-2019 ஆம் தேதி காலை 1000 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S. விமலா ஆகிய நான் அலுவலகப் பணியில் இருக்கும்போது துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. எஸ். ஷாஜஹான் அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த திடீர் இணை ஆய்வு, நாள் 22-02-2019-ஐ இணைத்து நடவடிக்கை (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் R. தமிழ்நாதன்...... பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 23/02/19
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.02.2019

Name: பெயர் S. VIMALA
Rank: நிலை INSPECTOR எண் .........
VAC. VNR.

விருதுநகர் ஊதக பிரிவின் குற்ற எண்.04/19 பிரிவு 102 Cr.PC and 7 of Prevention of Corruption Amendment Act 1988-ன் தொடர்ச்சி: எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர், திரு.எஸ்.ஷாஜஹான் (48/19), துணை ஆய்வுக்குழு அலுவலர் (தனி வட்டாட்சியர்), (குடிமைப்பொருள் வழங்கல்), அருப்புக்கோட்டை. பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, பொருள்: விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு செய்ததில் கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது - புகார் அளித்தல் - தொடர்பாக. நான் 22.02.2019ம் தேதி பிற்பகல் 2.30 மணிக்கு அருப்புக்கோட்டை, தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் (குடிமைப்பொருள் வழங்கல்) பணியில் இருந்தபோது, இராஜபாளையம் தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தில் கையூட்டுப்பணம் பெறப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மற்றும் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக வேண்டுகோளின்படி நான் விருதுநகர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திற்கு வந்து, விபரத்தை கேட்டுத் தெரிந்துகொண்டு ஊ.த.க.பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர், சிவகங்கை பொறுப்பு விருதுநகர் திரு.இரா.இரகுபதி மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.விமலா அவர்களுடன் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்ய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆளிநர்களுடன் 22.02.2019ஆம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு புறப்பட்டுச்சென்று விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் முடங்கியார் ரோடு, உழவர் சந்தை எதிர்புறம் அமைந்துள்ள இல்லத்து பிள்ளைமார் வணிக வளாக கட்டிடம், கதவு எண்.புதிய எண்.73 பழைய எண்.382ஏல் உள்ள இராஜபாளையம் தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தின் இரு அறைகளிலும் 22.02.2019ஆம் தேதி மாலை 5.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் தொழிலாளர் உதவி ஆய்வாளர் திரு.மாரிமுத்து என்பவர் அவரது பொறுப்பில் இருந்த பச்சைக்கலர் இரும்புப்பெட்டியை அவர் வைத்திருந்த அதற்கான சாவியைக்கொண்டு திறக்கச்சொல்லி பார்த்தபோது அந்த பச்சைக்கலர் இரும்புப்பெட்டியில் கணக்கில் காட்டப்படாத பணம் ரூ.26,000/-மும், மேற்படி அலுவலகத்தின் உதவியாளர் அறையில் இருந்த மரபீரோவில் இருந்த தொழிலாளர் உதவி ஆய்வாளர் திரு.மாரிமுத்துவின் Kalian Jewllers என்ற கைப்பையிலிருந்து கணக்கில் வராத பணம் ரூ.19,610/-மும், இரண்டு கருவூல சலான்களில் ஒவ்வொரு சலானிலும் இருந்த கணக்கில் வராத பணம் தலா ரூ.1000/-மும் சேர்த்து மொத்தம் ரூ.47,610/- கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி திடீர் இணை ஆய்வுசோதனையின்போது கைப்பற்றப்பட்ட மேற்சொன்ன மொத்த தொகை ரூ.47,610/-ஐ அவர் இராஜபாளையம் தொழிலாளர் உதவி ஆய்வாளர்

அலுவலகத்தில் இருந்துகொண்டு அரசுவேலையை செய்து கொடுத்ததற்காகவும், செய்து கொடுப்பதற்காகவும் அன்றையதினம் (22.02.2019) மேற்படி அலுவலகத்திற்கு அலுவலகரீதியாக சந்திக்க வந்த தொழிலாளர் சார்ந்த நிறுவனங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து அரசு வேலையை செய்ததற்காகவும், செய்வதற்காகவும் பெற்ற லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி, அந்த தொகை ரூ.47,610/- கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் நேற்று 22.02.2019ஆம் தேதி மாலை 5.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 8.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வு விபரம்:- திடீர் இணை ஆய்வு செயல்முறை ஆணை, விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் முடங்கியார் ரோடு, உழவர்சந்தை எதிர்புறம் அமைந்துள்ள இல்லத்துபிள்ளைமார் வணிகவளாகம், கதவு எண்கள் புதிய எண்.73 பழைய எண்.382A உள்ள இராஜபாளையம் தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தின் இருஅறைகளிலும் திடீர் சோதனை செய்ததன் விபர அறிக்கை நாள் 22.02.2019, விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தொழிலாளர் உதவிஆய்வாளர் அலுவலகத்தில் நம்பதகுந்ததகவல் அடிப்படையில் கீழ்க்கண்டஅலுவலர்கள் முன்னிலையில் திடீர்சோதனை மேற்கொள்ளப்பட்டதின் அறிக்கை. முன்னிலை:- 1.திரு.இரா.இரகுபதி, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிவகங்கை மாவட்டம், பொறுப்பு விருதுநகர் மாவட்டம். விருதுநகர், 2.திரு.எஸ்.ஷாஜஹான் வயது 48/2019, த.பெ.சையதுஅமானுல்லா, துணை ஆய்வுக்குழு அலுவலர், தனிவட்டாட்சியர், (குடிமைபொருள் வழங்கல்) அருப்புக்கோட்டை. 3.திருமதி.சு.விமலா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு, விருதுநகர் இன்று 22.02.2019 பிற்பகல் 17.00 மணி முதல் 20.30 மணி வரை ஆய்வு மேற்கொண்டபோது மேற்படி விருதுநகர் மாவட்டம், மாவட்ட தொழிலாளர் அலுவலகத்திலிருந்து தொழிலாளர் உதவிஆணையர் திரு.க.திருவள்ளுவன் அவர்கள் திடீர் ஆய்வு நடத்திக்கொண்டிருந்தார். அலுவலகத்தில் கீழ்கண்ட பணியாளர்கள் ஆஜரில் இருந்தார்கள். 1.திரு.வெ.மாரிமுத்து வயது 54/2019, த.பெ வெள்ளைச்சாமி, தொழிலாளர் உதவி ஆய்வாளர், தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம், இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம். 2.முகம்மதுநி.மத்துல்லாஹ் வயது 29/2019, த.பெ.கா.உதுமான், உதவியாளர், தொழிளாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம், இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம், 3.திரு.மாயப்பெருமாள், துப்புரவு பணியாளர், தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம், அலுவலக உதவியாளர் பணியிடம் ஒன்று காலியாக இருப்பதாக தெரிவித்தார். மேற்படி அலுவலகத்தில் பராமரித்துவரப்படும்

பதிவேடுகளை பார்வையிட்டதில் நிலையான முன்பணம் பதிவேட்டின்படி 19.02.19ஆம் தேதியிட்ட பதிவுகளின்படி இருப்பு ரூ.100 என இருந்தது. மேற்படி தொகையை தொழிலாளர் உதவிஆய்வாளர் திரு.மாரிமுத்து அவர்களை எடுத்து ஆஜர்செய்ய கோரியதில் பச்சைகலர் இரும்பு பெட்டியில் இருப்பதாக கூறினார். அதற்கான சாவியை வைத்து திறக்கச்சொல்லி பார்த்தபோது மேற்படி பெட்டியின் மேலாக ரூபாய் நோட்டுகள் இருந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்த்ததில் ரூ.26000/- (ரூபாய் இருபத்தி ஆறு ஆயிரம் மட்டும்) (2000X1=2000, 500x48=24000 Total 26000/-) இருந்தது. அதற்கான கணக்குகள் உள்ளதா என கேட்டதற்கு எந்தமுகாந்திரமும் கூறவில்லை. எனவே மேற்படி தொகைக்கு எவ்வித முகாந்திரம் தெரிவிக்காததால் ரூபாய்.26000/- கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி இரும்புபெட்டியினை ஆய்வு செய்ததில் காக்கி கவரில் ரூ.100 மட்டும் தனியாக இருந்தது. அந்தபணம் தான் நிலையான முன்பணம் ரூ.100/- என தெரிவித்தபடியால் அந்தபணம் ரூ.100/- அவரிடமே கொடுத்து திரும்ப பச்சைகலர் இரும்புபெட்டியில் வைத்து மூடப்பட்டது. அதன்பின் ஒருங்கிணைந்த வசூல் பதிவேட்டின்படி 19.02.2019ஆம் தேதியன்று இசைவு தீர்வுகட்டணம் ரூ.1000/- வசூல் செய்யபட்டும் மேற்படி தொகையில் ரூ.900/- தமிழ்நாடு தொழிலாளர்நல வாரிய செயலாளர் கணக்கு எண் 37667372706-லும், ரூ.100/- அரசு கணக்கு தலைப்பில் (023000800 AG 2799) செலுத்தப்பட்டு அதற்கான வங்கி செலான்கள் சரியாக இருந்தது. தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தின் உதவியாளர் அறையினை திடீர் ஆய்வு செய்தபோது அங்கிருந்த மரபீரோவில் Kalyan Jewllers என்ற கைப்பையிலிருந்து கணக்கில் வராதபணம் ரூ.19610/- (ரூபாய் பத்தொன்பதாயிரத்து அறுநூற்றி பத்து மட்டும்) (2000x1=2000, 500x17=8500, 200x7=1400, 100x67=6700, 50x7=350, 10x66=660 Total=19610) இருந்தது. அத்துடன் உணவு நிறுவனம் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் ரூ.1750/- என்று எழுதப்பட்டு அதில் இரண்டு ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.1000/- மடித்து இருந்தது. மேலும் சிவராமகிருஷ்ணன், சுதர்சன் புட்ஸ் உணவு நிறுவனம் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் ரூ.1000/- என்று எழுதப்பட்டிருந்த கருவூலச்செலானில் இரண்டு ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.1000/- இருந்தது. மேற்படிபணத்திற்கு சரியான முகாந்திரம் எதுவும் தெரிவிக்காதபடியால் மேற்படி தொகை மொத்தம் ரூ.21,610/- (இருபத்தொராயிரத்து அறுநூற்று பத்து மட்டும்) கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த அலுவலக பணியாளர்களை தணிக்கை செய்ததில் அவர்களிடமிருந்து கீழ்கண்டவாறு தொகைகள் இருப்பது தெரியவந்தது. அத்தொகைகள் சொந்தப்பணம் எனக்கண்டறியப்பட்டு அவர்களிடமே திரும்ப வழங்கப்பட்டது. வ.எண்.1.திரு.க.திருவள்ளுவன் ரூ.2200/-, 2.திரு.உ.முகம்மதுநி.்.மத்துல்லாஹ் ரூ.2620/-, 3.திரு.இரா.மாயப்பெருமாள் ரூ2950/-, 4.திரு.வெ.மாரிமுத்து, ரூ. 410/-. எனவே 22.02.2019 அன்று இராஜபாளையம், தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தின் திடீர் ஆய்வின்போது முகாந்திரம் தெரிவிக்காத பணம்

மொத்தம் ரூ.47610/- (ரூபாய் நாற்பத்தி ஏழாயிரத்து அறுநூற்று பத்து மட்டும்) வழக்கிற்காக கைப்பற்றப்பட்டது. இந்த நடவடிக்கையின்போது இராஜபாளையம் தொழிலாளர் உதவிஆய்வாளர் அலுவலக வருகைப்பதிவேடு, தற்காலிக பணரசீது புத்தகம் 2204001 முதல் 2204050 வரையிலானது, Kalyan Jewellery என்று பிரிண்ட் செய்யப்பட்ட ப்ரவுன் கைப்பை அத்துடன் இருந்த Daily Engagements 2019 என்று எழுதப்பட்ட Personal Memorandam1, ஒருங்கிணைந்த வசூல் பதிவேடு, நிரப்பட்ட கருவூல செலுத்துசீட்டுகள்-2 குற்ற இசைவு தீர்வு பதிவேடு, சட்டமுறை எடையளவு சட்டம் பதிவேடு கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட திடீர் தணிக்கை இன்று 22.02.2019 பிற்பகல் 20.30 மணிக்கு முடிக்கப்பட்டு மேற்படி அலுவலகத்தை எந்தஒரு பொருட்சேதமின்றி தொழிலாளர் உதவி ஆய்வாளர் திரு.வெ.மாரிமுத்து அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது. எனவே நேற்று (22.02.2019) எனது தலைமையில் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் முடங்கியார் ரோடு, உழவர் சந்தை எதிர்புறம் அமைந்துள்ள இல்லத்து பிள்ளைமார் வணிக வளாக கட்டிடம், கதவு எண்.புதிய எண்.73 பழைய எண்.382ஏல் உள்ள இராஜபாளையம் தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இணை ஆய்வில் மேற்படி அலுவலகத்தில் பணிபுரிந்த தொழிலாளர் உதவி ஆய்வாளர் திரு.மாரிமுத்து என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.47,610/-க்கு அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால், அவர் அன்றைய தினம் (22.02.2019) மேற்படி அலுவலகத்திற்கு வந்த தொழிலாளர் சார்ந்த நிறுவனங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து அரசு வேலையை செய்ததற்காகவும், செய்வதற்காகவும் பெற்ற லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி அவர்மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை என்னுடைய செயல்முறை நடவடிக்கையின் அறிக்கையை இத்துடன் இணைத்து இன்று 23.02.2019ம் தேதி காலை 10.00 மணிக்கு தங்களிடம் புகார் மனுவை அளிக்கிறேன். ஒப்பம் (எஸ்.ஷாஜஹான்), துணை ஆய்வுக்குழு அலுவலர் (தனி வட்டாட்சியர்), (குடிமைப்பொருள் வழங்கல்), அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். Received a complaint and registred a case in Virudhunagar V&AC Crime No.04/2019 U/S 102 Cr.Pc and 7 of prevention of corruption Amendment Act 2018 on 23.02.2019 at 10.15 hrs First information report (original copy) and complaint are submitted to the Honble Chief Judicial Magistrate cum Special Judge Srivilliputhur and copies submitted to the concerned Officers. (sd) S.Vimala, 23/02/19, Inspector of Police, V&AC, Virudhunagar.

[signature]
23/02/2019.
Inspector of Police,
V&AC, Virudhunagar
District